GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கக.] பிரமாதீச ஹு ஆவணிமீ [பகுதி-கo.
Vol. XI. August—September. 1913. No. 10.

பரிசோதனத்தொடர்.

(திருக்குறள்—௲௩௱௰௬.)

" துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று" என்பது குறள்.

இதற்கு, முன்னுரை:—"தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளேசொல்லியது." எனவும்,

தொகுத்துரை:—"முதிர்ந்தகலாமாகிய துனியும், இளையகலாமாகிய புலவியும் இல்லையாயின், காமம் செவ்விமுதிர்ந்தபழமும் இளங்காயும் போலும்." எனவும்,

விசேடவுரை:—"மிகமுதிர்ந் திறுமெல்லைத்தாயகனி நுகர்வார்க்கு மிகவு மினிமைசெய்தலிற் றுனியில்லையாயிற் கனியற்றென்றும், கட்டிளமைத்தாய காய் நுகருஞ்செவ்வித்தன்றாகலிற் புலவியில்லையாயிற் கருக்காயற்றென்றுங் கூறினான்." எனவும்,

முடிவுரை:—"இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்துகூறியவாறு." எனவும் பரிமேலழகருரை யேட்டுப்பிரதிகளிலும், அச்சுப்பிரதிகளிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

இக்குறளிலுள்ள உபமானோபமேயங்களையும், அவைபற்றி விசேடவுரையால் விளக்கப்பட்ட பொருளையும் உற்றுநோக்குங்கால் ஒருசிறிது பொருந்தாமையுளதாய்க் காணப்படுகிறது.

*

ஏனெனில்? இக்குறளினுள்ள உவமையணியில் உவமேயப்பொருள் காமம்; அது துனியின்மை, புலவியின்மையென்னும் அடைகளால் விசேடிக்கப்பட்டுத் துனியில்லாத காமம், புலவியில்லாதகாமம் என இருவேறுகூறுபாடெய்தி நின்றது. அவ்விருகூறுபாட்டிற்கும் முறையே கனியும், கருக்காயும் உவமமாகச் சொல்லப்பட்டமையால், 1. துனியில்லாத காமம் கனியற்று; 2. புலவியில்லாத காமம் கருக்காயற்று. என இரண்டு வாக்கியமாகவைத்துப் பொருளெழுதப்பட்டு, விசேடவுரையில் "மிகமுதிர்ந் திறுமெல்லைத்தாயகனி நுகர்வார்க்கு மிகவு மினிமைசெய்தலிற் றுனியில்லையாயிற் கனியற்றென்றுகூறினான்." என விளக்கப்பட்டிருக்கிறது.

இதனான் முதிர்ந்தகலாமாகிய துனி காமநுகருந்தலைமகற் கினிமைபயவாதென்றும், அஃதில்லாதகாமமே கனிபோ லினிமையுடையதென்றும் பொருள்கொள்ளுமா றெழுதியிருத்தலாற் காமத்துள் துனியென்னும் புலவி விரும்பத்தகாததெனக் காணப்படுகிறது.

"புலவியில்லையாயிற் கருக்காயற்று" என்னும் பின்வாக்கியப் பொருளை "கட்டிளமைத்தாயகாய் நுகருஞ்செவ்வித்தன்றாகலின், புலவியில்லையாயிற் கருக்காயற்றென்று கூறினான்." என விளக்கியிருத்தலால் இளையகலாமாகியபுலவியில்லாத காமம் நுகரும் செவ்வித்தல்லாத கருக்காய்போ லினிமைபயவாமையாற் காம மினிமைபயத்தற்குப் புலவிவேண்டுமென்று புலவியொன்றே விரும்பப்பட்டதெனக் கருதியதாகக் காணப்படுகிறது.

இவ்வாறு முதிர்ந்தகலாமாகிய துனி வெறுப்பிற்கும், இளையகலாமாகிய புலவி விருப்பிற்கு மிலக்காயிருக்குமாயின் "இவ்விரண்டும்வேண்டுமென்று வியந்துகூறியவாறு" என் றெழுதிமுடித்துள்ள முடிவுரைக்கு இளையகலாமாகிய புலவியொன்றே பொருத்தமுடையதாக, அதனுடனெண்ணிய துனியொன்றுமட்டும் பொருத்தமில்லதாகக் கொள்ளக் கிடக்கின்றது.

அதுவும் பொருந்துமாறு, இவ்விரண்டுமென்றதற்குத் துனியின்மை, புலவி என்னும் இவ்விரண்டும் எனப் பொருள்கொள்வோமெனில்? அது பொருந்தாது. ஏனெனில்? ஒருவாக்கியத்துள் உடனெண்ணிய இரண்டுபொருளைச்சுட்டியவிடுத்து அவ் விரண்டனையும்

யாதானு மொருமுறையேபற்றிக் கொள்ளவேண்டும். கொள்ளவே, துனியின்மையைச் சுட்டிய முறையானே புலவியின்மை சுட்டப்படுவ தல்லது அதனுண்மை சுட்டப்படாது. அதனால் "ஊடுதல் காமத்துக் கின்பம்" என்பதனோடு மாறுபடுவதாம்.

ஒருவாக்கியத்துள்ள துனி புலவிகளுள், ஒன்றனை யொருமுறை யானதன் இன்மையையும், பிறிதொன்றைப் பிறிதொருமுறையான் அதன் உண்மையையும் பொருளாகக்கொள்வது அர்த்த ஜரதி நியாயத் தாற் பாதிதமாகும். (அதாவது, ஒருசுரைக்காயில் ஒருபாதி விதைக்கு வைப்பேன் ; மறுபாதி கறிக்குவைப்பேன். என்னும் பொருந்தாவழக் குப்போல் ஒன்றனையொன்று விரோதிக்குமென்பதாம்.) ஆதலால் "இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்து கூறியவாறு" என்னும் முடிவுரைக்குத் துனியின்மையும், புலவியும் வேண்டுமென்று வியந்து கூறினானென்று பொருள்கொள்ளுதல் பொருந்தாதாகின்றது.

அன்றியும், துனி காமத்துக்கு ஒவ்வாததன்று; ஒவ்வாததாயின் குணம்பற்றி உவந்துவியந்து கூறும் தலைவன்கூற்றில் உடனெண் ணத்தகுவதன்று. புலவி, "ஊடுதல் காமத்திற்கின்பம்" எனக் காம வின்ப மிகுவிக்குங்குணமுடைமைபற்றி வியத்தற்கிலக்காயிற்று. அவ்வாறே துனியும், காமவின்ப மிகுவிக்கு மியல்புடையதாகுங் குண முடைமைப்பற்றியே உடனெண்ணப்பட்டிருக்கிறது. அக்குணமில தாயின் அது குற்றத்தின்பாற்பட்டுத் தலைமகனுவப்பிற் கிலக்காய தலைவிபால் அவனறியாதொழியவேண்டும். ஒழியவே, துனியில்லை யாயிற் காமம் கனியற்று என்று தலைமகன்கூற்றில் நுழைப்பது அசம் பாவிதமாகும். தலைவன்கூற்றில் நுழைத்தமையாற் புலவியோ டொப்பக் காமவின்ப மிகுவிக்குங்குணமுடைமைபற்றித் துனியும் வேண்டுமென்று வியந்துகூறினான் எனவே கொள்ளவேண்டும். முற் குறளில் இத்துனியே தனியே வியந்து கூறப்பட்டமையான் இங்கும் அஃது உடனெண்ணத்தகு மெனக் கொள்க.

இவ்வாறுகொள்ளுங்கால் "கனி நுகர்வார்க்கு மிகவுமின்பஞ் செய்தலின்" என்றெழுதியுள்ள விசேடவுரைவாக்கியம் விரோதிக் கின்றது. எங்ஙனமெனில்? இங்குக் கூறியுள்ளகனி நுகர்வார்க்கு மிகவு

மின்பஞ் செய்யுமாயின், துனியில்லாதகாமம் இன்பஞ் செய்யுமென வும், துனி அதற்கு விரோதமாமெனவும் கொள்ளக்கிடப்பதுகொண்டு கண்டுகொள்க.

விசேடவுரையும், முடிவுரையும் ஒன்றனையொன்று விரோதிக்கு மாறு ஒருரையாசிரிய ரெழுதாராகலால் அவ்விரண்டனுள்ளும் தகுதி யுள்ளதொன்றைப் பிறிதொன்று தழுவிநிற்குமா றெழுதப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது.

தகுதியுணருமிடத்து இங்குக் கூறிய துனியென்பது யாது? புலவியென்பது யாது? அவற்றுள் ஒவ்வொன்றும் காமத்துக்கு எத் திறத்தானியையுடையது? என்பவற்றைத் துணியவேண்டும்.

இங்கு வழங்கியுள்ள துனி புலவியென்னு மிரண்டும் வெறுப் பின் பரியாயமாய்நின்று ஊடல் என்னும் ஒருபொருள்குறித்த திரிசொல்லேயாயினும், அவை பொருளடையாய் வேறுபிரித்தெண் ணப்பட்டமையால் உவமைக்கேற்ப முதிர்ந்தகலாம் துனி எனவும், இளையகலாம் புலவி யெனவும் பொருள்வேறுபாடுகற்பித் துரையெழு தப்பட்டிருக்கிறது.

ஊடலுள், முதிர்ந்தகலாம் யாது? இளையகலாம் யாது? என நோக்குமிடத்துத் தலைவன் றவறுளனாகத் தலைவியூடுதல் இளையகலா மெனவும், தவறிலனாகவும் தவறுகற்பித் தூடுதல் முதிர்ந்தகலாமென வும், இவை கூட்டத்தின் முன்னும் பின்னும் நிகழ்வனவெனவும், அவை காமவின்பமிகுவிக்குந் திறனுடைமையாற் காமத்துக்குத் துணையாயமையு மியைபுடையவெனவும் பின்வருமாற்றால் விளங்கு வனவாம். இதனை,

> “நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
> பூவன்ன கண்ணா ரகத்து” (திருவள்ளுவர்-௧௩௦௫.)

என்ற முற்குறளினுரையுள், “புலத்தகை” என்பதற்குப் புலவி மிகுதி என்று பொருளெழுதியதுணையானே, தலைவன் றவறிலனாகத் தலைவியூடுதல் முதிர்ந்தகலாமெனவும், அருத்தாபத்தியால் அத னின்வேறாயவூடல் இளையகலாம் எனவும் உணருமாறு உரையாசிரியர் தாமே யுய்த்துணரவைத்ததுகொண்டு கண்டுகொள்க.

இக்குறளுரையுள், புலத்தகை என்றசொல்லுக்குப் புலவிமிகுதி யென்று பொருளெழுதப்பட்டிருக்கிறது. இதில் மிகுதியாவது யாதெனவாராயுமிடத்துப் புலவிக்கண் எண்ணின்மையால் எண்ணான் மிகுதலன்று; "உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது, மிக்கற்றா னீள விடல்" என்று கடியப்பட்டமையாற் காலத்தால் மிகுதலுமன்று; மற்றியாதெனில்? குளிர்மிகுதி என்பதுபோல அதன் ஆற்றலாகிய பண்பால் மிகுதலேயாமென விளங்குகின்றது. இப்புலவிமிகுதியே அதிகாரப்பட்டமையால் அடுத்தகுறளினு மெடுத்துக்கொள்ளப்பட்டதாய்த் துனியென்னும்பெயரால் வழங்கப்பட்டிருக்கிறது. இதனையுணர்த்தக்கருதி யுரையாசிரியர் "முதிர்ந்தகலாமாகியதுனி" யென விளக்கியுரைத்திருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

ஆயினும் புலத்தகையென்பதற்குப் புலவிமிகுதியெனப் பொருளுரைப்பது எவ்வாறு பொருந்துமெனில்? ஆணிற் சிறந்தானை ஆண்டகை என்பதுபோலப் புலவியிற் சிறந்ததனைப் புலத்தகையென வழங்கினமையாற் புலவிமிகுதியெனப் பொருளுரைப்பது பொருந்துமென்க.

தலைவன் றவறிலனாக நிகழும் புலவியே புலவிமிகுதியென்பதெதனாற் பெறப்பட்டதெனின்? "நலத்தகைநல்லவர்க்கேஎர் புலத்தகை"என்பதில் நலத்தகைநல்லவர் தவறிலராதலால் அவர்வழிநிகழ்வதனைப் புலத்தகையெனவிதந்தோதினமையாற் பெறப்பட்டதென்க.

தலைவன்றவறுகாரணமாகத் தோன்றும்புலவியினும் அஃதின்றாகத் தோன்றும்புலவி வலியுடையதாதலால் அது புலத்தகையென்றும், முதிர்ந்தகலாமென்றும் வழங்கப்பட்டது. ஊடற்கு இளமையும், முதிர்ச்சியும், காரணமுளதாய்த் தோன்றலும் காரணமின்றித் தோன்றலுமாகிய மென்மை வன்மைபற்றிவழங்கும் குறிப்புக்களாம்.

இங்ஙனங் கூறிய முதிர்ந்தகலாமாகிய துனி,

"கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருதிதியைக்
காட்டிய சூடினீ ரென்று." (திருவள்ளுவர். ௧௩௧௩.)

"தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரின்னீர ராகுதி ரென்று" (,, ,, —௧௩௧௯.)

"நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று" (,, ,, —கஙஉ௦.)

என்னுங் குறள்களாற் கூறப்படுவது. இது கூட்டத்தின்பின்பு நிகழ்வ தென்பதைப் புலவிநுணுக்கவதிகார விவரணத்துட்காண்க.

இதனின்வேறாய இளையகாலமாகியபுலவி கூட்டத்தின் முன்பு தலைவனது தவறுகண்டு தலைவிபுலத்தலென்பதனை,

"அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்" (,, ,, —கஙoங)
"ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று" (,, ,, —கஙoச.)

என்ற குறளுரைகளாற் காண்க.

இவ்வாறுகூறிய துனி புலவிகள், முறையே "நலத்தகை நல்லவர்க்கேஎர் புலத்தகை" எனவும், "ஊடுதல் காமத்திற்கின்பம்" எனவும் கூறப்பட்டமையால் அவை காமவின்ப மிகுவிக்குந்திறனுடையனவாய்க் காமத்துக்குத் துணையாம்மையு மியையுடைய வென்பது பெறப்படும்.

பெறவே, புலவியில்லாத காமத்தோடொப்பத் துனியில்லாத காமமும் இன்பம்பயவாதென்பது நன்கு விளங்கும்.

இங்குக் காமமென்றது யாதெனவாராயின், துனியும் புலவியுமில்லாத வென்னுது "இல்லாயின்" என்றதுணையானே துனி, புலவிகளுக்குப் பற்றுக்கோடாகாத கலவியொழித்து, அதன் பின்னும் முன்னும் அவற்றிற்குப் பற்றுக்கோடாதற்குரிய காமபாகங்களெனக் கொள்ளல்வேண்டும். அவையே அத் துனி புலவிகளின் உண்மையின்மைகளின் விகற்பநிலைக்களமாதலால் அவற்றி னொருதலைபற்றி "துனியும் புலவியு மில்லாயின்"என வழங்கற் குரியவாமாறு காண்க.

இவ்வாறு துனியில்லாத காமபாகம் இனிமை பயவாததாயிருக்க அதற்குக் கனியை யுவமையாகக் கூறிய தெதுபற்றியென்பதை விசாரிக்குமிடத்து அக் குறளின் உரைநடையடைகளாற் றெளியலாகு மென்பது பின்வருமவற்றால் நன்குவிளங்கும்.

"துனியும் புலவியு மில்லாயிற் காமங், கனியுங் கருக்காயு மற்று" என்பதிற் கனியென்றசொல்லுக்குச் சொல்லாற்றல்பற்றிப் பொதுமையிற் பழமென வுரையெழுதியெழியாது, இடம்நோக்கி யவ்வாற்றலைக் குறைத்துச் செவ்விமுதிர்ந்தபழமென அடைகொடுத்து உரையெழுதப்பட்டிருக்கிறது. செவ்விமுதிர்ந்த என்னுமடையால், செவ்விமுதிராததீங்கனி விலக்கப்பட்டது. கனிக்குச்செவ்வியாவது நுகர்வார்க்கு இனிமைமிகும் பருவம், அதன் முதிர்ச்சியாவது அப் பருவமொழிப் பின்வரும் பருவம். உரையுட் "செவ்விமுதிர்ந்தகனி" யென்றதையே விசேடவுரையுள் "மிகமுதிர்ந்திறுமெல்லைத்தாயகனி" என விளக்கியிருக்கின்றனர். இதில் மிகமுதிர்ந்திறுதல் நுகரும்பதனழிதல். இத்தன்மையுடைய கனியே அழிந்தகனியென வழங்கப்படுகின்றது. இது நுகர்வார்க்கு மிகவு மினிமை செய்யுமென்பது பிரத்தியக்ஷவிருத்தமாய்ப் பொருளொடுபொருந்தாதிருக்கின்றது. அதனியல்பு நோக்குங்கால்நுகர்வார்க்கு மிகவுமினிமைசெய்யாமையே யுள்ளது. இது பொருளொடுபொருந்துகின்றமையால், மிகமுதிர்ந்திறுமெல்லைத்தாயகனி நுகர்வார்க்கு மிகவு மினிமைசெய்யாதாதலால் என்று விசேடவுரை எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

இப்பாடம் படித்து உவ்மையொடுபொருந்த நோக்குமிடத்து, கனியொன்றே முதற்பருவத்தில் நுகருஞ்செவ்வித்தல்லாத கட்டிளமைத்தாய கருக்காயாயும், இடைப்பருவத்தில் நுகருஞ்செவ்வித்தாய பழமாயும், பிற்பருவத்தில் மிகமுதிர்ந் திறுமெல்லைத்தாய கனியாயும் பரிணமிப்பதுபோலக் காமம் ஒன்றே முதலில் முயங்குஞ்செவ்வித்தல்லாத இளங்காமமாயும், இடையே முயங்குஞ்செவ்வித்தாகி மிக்கவின்பம்பயக்கும் விழைகாமமாயும், இறுதியில் மிக்கவின்பம் பயவாத முதிர்காமமாயும் பரிணமிக்குமென்றும், அக் காமத்துள் மிக்கவின்பம்பயவாத விறுதிப்பாகமும் முதற்பாகமும் முறையே துனிபுலவியுடன்சேர்ந்துழி அவை இடைநின்ற விழைகாமத்தோடொப்ப மிக்கவின்பம்பயக்குமென்றும், துனி புலவிகளில்லையாயின் அவ் விருபாகமும் மிகமுதிர்ந்திறுமெல்லைத்தாய அழிகனியும், *கட்

* கட்டிளமைத்தாய கருக்காய் என்றது வழக்கில் கட்டக்கருங்காய் என அருகி வழங்கப்படுகிறது.

டிளமைத்தாய கருக்காயும்போல மிக்கவின்பம்பயவாவென்றும், மிக்கவின்பம் பயத்தல்பற்றி அக் காமபாகங்களிற் றுனியும் புலவியும் வேண்டுமென்று தலைவன் வியந்துகூறுதல் பொருந்துமென்றும் கொள்ளக்கிடக்கின்றது.

அன்றியும், பிரிவின்கட் காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையலராய் மலர்ந்து பரிணமித்துவந்த காமம், கூட்டத்தின்கட் காயாய்ப் பழமாய்க் கனியாய்ப் பரிணமிக்கக்கடவதாயிருக்கத் துனி புலவிகளின் கூட்டரவால் அங்ஙனம் பரிணமியாது முழுதும் பழம் போன்றிருந்ததெனத் தலைவன் வியத்தற்கிலக்காமாறு பொருந்துகின்றது.

ஊடலுவகையிறுதிக்குறளின் விசேடவுரையுள் "முதிர்ந்த துனியாயவழித் துன்பம்பயத்தலானும்" என்றது அளவிறந்ததுனியையாதலால் இங்குக்கூறிய அளவறிந்து கூடும்துனி இன்பம்பயக்குமென்பது மாறுபடுவதன்று.

இங்ஙனங் கூறியவாற்றால் மிகமுதிர்ந் திறுமெல்லைத்தாயகனி நுகர்வார்க்கு மிகவுமினிமைசெய்யாதாதலாலென்ற பாடமே, யேடெழுதுவோர் பராக்கினால் அடைப்பொருளைநோக்காது கனியென்ற துணையேகொண்டு தகுதிநோக்கி மிகவுமினிமைசெய்தலாலென யாதாவெழுதாதெழுதிய பாடபரம்பரையாக மாறியிருக்கலாமென்று தோன்றுகின்றது. ஆயினும் பண்டிதர்களின் அபிப்பிராயம் தெரிந்து திருத்தவேண்டும்.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

உ

தமிழும் ஸம்ஸ்கிருதவுதவியும்.

Tamil and the influence of Sanskrit.

[௯௦௯-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

3. சைவ சித்தாந்த காலம்.

கி. பி. 800-ம் ஆண்டுக்குப் பிறகு அவதரித்த சங்காசாரியருக்குப் பின் பௌத்த மதமும், க்ஷமண மதமும், பலங்குறையச் சைவ மதமானது ஸ்தாபனமாய் அபிவிருத்தியடைந்தது. சைவமதாபிவிருத்திக்கு முக்கியமான மத்யஸ்தலம், மதுரை. மதுரை ஸ்தல புராணங்களில், இக்காலத்திய தமிழ்த்தேச விவரமும், பாஷா விவரமும் தெளிவாய்க் காணலாம். இக்காலத்திய முக்கியமான ஆசிரியர்கள் திருவாசகம் எழுதிய மாணிக்கவாசகர், ஜைன, பௌத்தமதத்தைக் கண்டித்தவரான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலானவர்களே. இவர்களில் அப்பர் மாத்திரம் வெள்ளாளர். மற்ற மூவரும் ப்ராஹ்மணர்கள்.

4. வைஷ்ணவ சித்தாந்த காலம்.

மேற்கூறிய காலத்திலேயே வைஷ்ணவ மதமும் அபிவிருத்தியடைந்தது. வைஷ்ணவக்ரந்தகாரர், தமிழ்ப்பாஷையின் அபிவிருத்திக்கு விசேஷ காரணஸ்தர்களாயிருந்திருக்கிறார்கள். இக்காலத்தில் முக்கியமான வைஷ்ணவ சமய நூல்கள், 12 ஆழ்வாராதிகளாற் பாடப்பட்ட, நாலாயிரப்ரபந்தங்கள் இவை முக்கியமாய் ஸம்ஸ்கிருத வைஷ்ணவ புராணங்களை யனுசரித்தே யிருக்கின்றன.

இக்காலத்தில் மேற்கூறியவாறு மதாபிவிருத்திக்குக் காரணமான நூல்களைத் தவிர, வடமொழியினின்றும் அநேக புராணங்கள், இதிகாசங்கள், வேதாந்த நூல்கள், வைத்ய சாஸ்திரங்கள், ஜோதிடம் முதலான நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதுமல்லாமல், அவைகளை யனுசரித்து அநேக முதல்நூல்களும் எழுதப்பட்டன.

இராமாயணமெழுதிய கம்பரும், நளவெண்பா எழுதிய புகழேந்தியும், ஒட்டக்கூத்தரும், அஷ்டாங்கசித்தி, வாகடம் முதலான பல வைத்ய நூல்களை வரைந்த பதினெண் சித்தர்களும் இக்காலத்தவர்களே. மற்றும், தொல்காப்பியத்துக்கு உரை யெழுதிய சேனுவரையர், நச்சினார்க்கினியர் என்ற ப்ராஹ்மண கவிகளும், குறளுக்கு உரையெழுதிய பரிமேழலகர் என்ற ப்ராஹ்மணரும், நன்னூல் எழுதிய பவணந்தி என்ற ஜைன முனிவரும் இக்காலத்தவர்கள்தான்.

தமிழ் நூல்களென்று தற்காலத்தில் விசேஷமாய்க் கொண்டாடப்படும் நூல்களெல்லாம் அநேகமாய் கி. பி. 1600-ம் ஆண்டுக்கு முற்பட்டுத்தான் எழுதப்பட்டிருக்கின்றன. பிறகு காலக்கொடுமையால் நேர்ந்த கோலத்தாலும் தமிழரசர்களின் நாசத்தாலும், மகம்மதிய அரசரின் உபத்ரவங்களாலும், ஆதரிப்போரில்லாமல் தமிழ் க்ஷீணதசையடைந்து, சுமார் 250 வருஷ காலம், இருக்குமிடமே தெரியாது கிடந்தது. மேற்கூறியவைகளினின்றும் நாம் அறிவன யாவையெனில்,

(1) அகஸ்தியர் அல்லது ஆர்யர் வரவுக்கு முன் பல நூற்றாண்டுகளாக இந்நாட்டில், தமிழ் அல்லது அதன் பூர்வ பாஷையான த்ராவிடம் வழங்கிவந்தது.

(2) அகஸ்தியர் காலத்துக்குமுன், தமிழ் வாசக (Literary) பாஷையாயிருந்ததென்பதற்கு யாதொரு ஆதாரமுமில்லை.

(3) வழக்குப் பாஷை, வாசக பாஷையாகவும் ஆக ஆரம்பித்தது ஆர்யர் வரவுக்குப் பிறகுதான்.

(4) ஆர்யர்கள் முதன்முதற் குடியேறிய நாடுகள், அக்காலத்தில் செழிப்புற்றோங்கிய தமிழ் நாடுகளாகிய சோழ பாண்டிய தேசங்களே.

(5) ஆர்யர்கள், தங்கள் மதஸித்தாந்தங்கள், புராண இதிகாசங்கள், உலக உற்பத்தி, ஜீவோற்பத்தி, ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம், புனர்ஜன்மம், கர்மம், ஞானம் முதலான அதிபௌதிக (Metuphysical) ஸித்தாந்தங்களையெல்லாம் தமிழருக்குக் கற்பித்து, தமிழ்

நூல்கள் பலவும் ஆர்யமத அபிப்ராயங்கள் நிறைந்தனவாகவே செய்யப்பட்டிருக்கின்றன.

(6) தவிர, ஆர்யர்கள் தங்கள் பாஷைகளிலுள்ள அபூர்வமான கருத்துக்களுக்குச் சரியான பதங்கள், தமிழிற் கலந்தார்கள்.

(7) சுமார் 2000 வருஷங்களாய்த் தமிழ் நாட்டில் அரசாண்ட அரசர்களின் பெயர்களும், அவர்கள் தாங்கள் சந்த்ரவம்சத்தவர்கள் என்று சொல்லிக்கொண்டதும், தாங்களும் க்ஷத்திரியரென்று நிரூபிக்கச் செய்த முயற்சிகளும், ஸம்ஸ்க்ருதக் கலப்பினுடையவும் ஆர்ய நாகரீகத்தினுடையவும் மிகுதியைக் காட்டும்.

(8) அநேக தமிழ் நூல்களின் தலைப்பெயர்களும், அவைகளின் கதைகளும், ஸம்ஸ்கிருத வர்ணனைகளும், அநேக தமிழ் நூலாசிரியர்கள் ஆர்யகுலஞ்சேர்ந்த அந்தணராயிருப்பதும் ஸம்ஸ்கிருத பாஷையின் விசேஷ உதவியைக் காட்டும்.

(9) இந்நிலைமையில், ஸம்ஸ்கிருதச் சொற்கலப்புக்களையும், ஆர்யமதக்கருத்துக்களையும், ஸம்ஸ்கிருதவர்ணனைகளையும் பிரித்துவிட்டால், தமிழில் ஸ்வயமாயிருப்பது அதிக சுவல்பமாயிருக்கும் என்பனவாம்.

தற்காலம்.

தமிழின் மூன்றுவது காலமான தற்காலம் சுமார் கி. பி. 1850-ம் ஆண்டு முதல் துவங்கியதாய்க்கூறலாம். இத்தக்ஷிண தேசத்தில் ப்ரிட்டிஷ் அரசாக்ஷி ஸ்தாபனஞ் செய்யப்பட்டதுமுதல், ராஜபாஷை ஆங்கிலமாயிருப்பினும், வ்யவஹாரபாஷையும், தேசபாஷையும் தமிழாகவே உபயோகப்படுத்தியதாலும் சர்வகலா பரீக்ஷைகள், முதலான இராஜாங்க ஆதரவுபெற்ற கல்விச்சாலைகளிலும் தமிழும் ஒரு கட்டாயமான உபபாடமாய் வைக்கப்பெற்றதாலும், கல்வியிலபிமானமுள்ளவர்கள் மறுபடி கஷ்டமில்லாமல் ஆராய்ச்சி செய்ய ஏதுவான சௌகர்யங்கள் நேர்ந்ததாலும் மறுபடி தமிழ் தலையெடுக்கத் தொடங்கிற்று.

இக்காலத்தில் முக்யமாய் எழுதப்படுகிற க்ரந்தங்கள், ஸம்ஸ்க்ருதம், இங்கிலீஷ் முதலான இதர பாஷைகளிற் சிறப்பாயுள்ள

நூல்களின் மொழிபெயர்ப்புக்களும், அவைகளை யனுசரித்துள்ள முதல் நூல்களும், நாவல்களும், நாடகங்களும், விசேஷமாய் மேல் நாட்டில் வழங்கும் பௌதிகம் முதலான சாஸ்த்ர நூல்களை யனு சரித்த இயல் (Prose) நூல்களும் பிறவுமாம்.

இக்காலத்தில் எழுதப்படும்இசை (Poetry) நூல்கள், முற்காலத் தவைபோல ஸரஸமாயும், எளிதாயும், இனிமையாயுமிருக்கவில்லை.

இக்காலத்தில் இசை (Poetry) யில் முதல் நூல் யாதொன். றும் எழுதப்பட்டுப் புகழ்பெற்றதாகவுங் காணப்படவில்லை. எழுதப் பட்டவைகளின் சில பொதுவாக நடை (style) கடினமாயும் வழக் கிலில்லாது மறைந்த (obsolete) பதங்களாகவும், பொருள் சாதுரியத் தைக்குறைத்தாவது சொற் சாதுரியங்கள் நிறைந்தனவாகவு மிருக் கின்றன.

தமிழ்.

'தமிழ்' என்னும் பதத்துக்கு இலக்கணம் கூறுமிடத்து, அபிப் பிராயபேதங்கள் பல இருக்கின்றன. 'தமிழ்' என்னும் பதமானது காரணப்பெயர் என்று சிலரும், இடுகுறிப்பெயர் என்று சிலரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

(1) 'தமிழ் என்பது சிறப்பு 'ழ' கரம்வாய்ந்த பாஷையென்று கூறுவர் ஒரு மதத்தார். இது யுக்திக்கு அழகாயிருப்பினும், உண் மைக்கு விரோதமென்று தோன்றும். சிறப்பு 'ழ' கரம், இப்பா ஷைக்கு மாத்திரம் விசேஷமானதன்று. இதன் ஸஜாதீயமான, மங் கோலியம், சீனம் முதலான இதர துரேனிய பாஷைகளிலு மிருப்ப தாய்த் தெரியவருவதால், இதற்கு மாத்திரம் தமிழ் அல்லது சிறப்பு 'ழ'கரம்பெற்ற பாஷையென்று விசேஷப்பெயர் இட்ட காரணம் தெரியவில்லை.

மேலும், சிறப்பு 'ழ'கரமில்லாத ஸம்ஸ்க்ருதம் முதலான ஆர்ய பாஷைகளுடன் ஒப்பிட்ட பிறகுதான் இப்பெயர் சூட்டப்பட்டதென் றால், அவ்வாறு ஒப்பிட ஏதுவான ஸம்ஸ்க்ருதக் கலப்புக்காலத்துக்கு முன், இதற்கு என்னபெயர் இருந்தது என்ற சங்கையுண்டாகும்.

(2) தமிழ் என்பது தேன்மொழி என்னும் பதத்தின் மரூஉ வென்பது இரண்டாவது சித்தாந்தம்,

(*a*) தேன்மொழி தமிழ் என்று மருவுவதற்குச் சரியான, சப்த சாஸ்த்ர (Phonctial) விதிகள் ஒன்றுங் காணப்படவில்லை.

(*b*) தவிரவும், இதற்கு எதிர்ப் பதமான வடமொழி (அல்லது ஸம்ஸ்கிருதம்) என்பது அவ்விதிக்குட்பட்டு மருவியிருப்பதாகவும் காணப்படவில்லை.

(*c*) மேலும் தென்மொழி யென்ற நாமகரணமானது, ஸம்ஸ்கிருதம் தெற்கே வரத்தொடங்கிய காலத்துக்குப்பிறகுதான் இவ்விரு பாஷைகளையும் பகுத்தறியுமாறு, தமிழறிஞர்களாற் சூட்டப்பட்டதாயிருக்கவேண்டும். அப்படி யிருக்குமாயின், ஸம்ஸ்கிருத வரவு காலத்துக்குமுன் இப்பாஷை எப்பெயர் பெற்றிருந்தது? அப்பெயர் முழுதும் மறைவதற்குக் காரணமென்ன? என்ற ஆசங்கைகளுக்கிடமுண்டாகின்றது.

ஆனால் வடமொழிக்கு ஸம்ஸ்கிருதம் (அதாவது நன்றாய்ச்செய்யப்பட்ட பாஷை) என்ற பெயர் உலகின்கண் வழங்கிவரும் இதர பாஷைகளிலும் சிறந்த பாஷையென்று உயர்வு கருதியிட்டதன்று. ஆர்யர் வழங்கிவந்த பாஷையானது, ப்ராக்ருதர் அல்லது சாதாரண ஜனங்கள் பேசும் பாஷையான ப்ராக்ருதபாஷை அல்லது வழக்குப் (Collequial) பாஷையெனவும், ஸம்ஸ்க்ருத பாஷை அல்லது வாசக (literary) பாஷையெனவும் இருவகைப்படும். ஸம்ஸ்க்ருதம் ப்ராக்ருதத்துக்கு எதிரானது அல்லது விசேஷமானது என்பதுமாத்திரமேயொழிய, உலகபாஷைகளுக்கெல்லாம் சிறந்ததெனப் பொருள்படாது. வழக்குத் தமிழைக் காட்டிலும் வாசகத் தமிழைச் செந்தமிழ் (அல்லது செம்மையாய்ச் செய்யப்பட்ட தமிழ்) என்று வாசக (literary purposes) த்துக்கு உபயோகப் படுத்தியிருப்பது போலாகும்.

(3) தமிழ் என்றால் இனிய பாஷை யென்று பொருள் என்று கூறுவார்கள். இதுவும் யுக்திக்கழகாயினும் உண்மைக்கு விரோதம் போலத் தெரிகின்றது. உலகத்தில் அவரவர்களுக்கு அவரவர்கள்

பாஷை இனிமைதான். அவர்களெல்லோரும் அவ்வாறு தங்கள் பாஷைக்குப் பெயரிட்டுக்கொள்ளவில்லையே.

ஆனால், வடமொழிக்கு ஸம்ஸ்கிருதம் (அதாவது நன்றாய்ச்செய்யப்பட்ட பாஷை) யென்று பெயர் வழங்குகின்றதே, அதுபோலத் தென்மொழிக்கும் தமிழ் (அதாவது இனிய பாஷை) என்ற சிறப்புப் பெயர் வாய்ந்திருக்கலாகாதா? என்ற சமாதானம் கூறலாம்.

(4) தமிழ் என்பது த்ராவிடம் என்ற சொல்லின் மரூஉவென்றும், அது வெகுகாலமாய் இடுகுறிப்பெயராய் வந்தசொல்லின் மரூஉவேயொழிய, எக்காலத்திலாவது எக்காரணம்பற்றியாவது இடப்பட்ட காரணப் பெயரல்லவென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்கள்.

த்ராவிடம் என்பது தமிழ் என்று மருவியதென்று கேட்க முதலில் அதிசயமாகத்தானிருக்கும். ஆனால் அநேக பாஷைகளின் பெயரைக்கவனிக்கையில், அவைகள், பூர்வகாலம் முதல், தேசம், ஜாதி முதலானவைகளில் ஒன்றைப்பற்றியே யமைந்தனவாயிருக்கின்றன. ஆங்கிலர் பேசுவது ஆங்கிலம், க்ரேக்கர் பேசுவது க்ரீக், அரபியர் பேசுவது அரபி, என்பது போல். இன்னும் த்ராவிடம் என்பது தமிழ் என்று மருவ வேறு ஆதாரங்களிருக்கின்றனவா? என்ன விதிகளால் அவ்வாறு மருவிற்று? என்று விசாரிப்போம். முற்காலத்தில் இத் தமிழ் நாடானது, த்ராவிடம், த்ரமிடம், த்ரமிழம் என்றும், இத்தேசத்தவர்கள் த்ராவிடர், த்ரமிடர், த்ரமிழர் என்றும் வழங்கப்பட்டு வந்தனர்.

மஹாபாரதம் (திக்விஜய பர்வம்).

दक्षिणाभिमुखश्चोलस्य विषयं ययौ
ददृशे पाण्ड्यदेशांश्च कावेरीं सरितां वराम् ।
द्रविडांश्चैव राजेन्द्र स्त्रीराज्यं च ततः परम्
मत्स्यान्नवन्तकं ततो दृष्ट्वा ...॥
ससैन्यस्ततो दृष्ट्वा द्रमिडानान्ध्रकान्
विसृज्य तान् महाबाहुः प्रययौ दक्षिणां दिशम् ।

ப்ரேஷயாமாஸ [illegible] தூதாந் பாண்ட்யாய [illegible]
ப்ரதிஜக்ராஹ தஸ்யாஜ்ஞாம் ஸ ப்ரீத்யா மலயத்வஜ:॥
[illegible] ஜிஷ்ணோ: பாண்ட்யஸ்ய தநயா [illegible]
சித்ராங்கதேதி விக்யாதா த்ரவிடயோஷிதாம் வரா
[illegible]॥
பாண்ட்யம் த்ரமிடராஜானம் ஶ்வஶுரம் மலயத்வஜம்
[illegible]
[illegible] த்ரமிளை: [illegible]
[illegible]॥

இவற்ருல் நாமறிந்துகொள்ளுவன,

(1) அக்காலத்தில் சோழ பாண்டிய தேசங்கள் ஸ்தாபனமாயிருந்தன.

(2) பாண்டிய தேசத்தரசன் மலயத்வஜன், மணலூர் என்ற தலை நகரில் அரசாண்டான்.

(3) அவன் மகள் சித்ராங்கதை அர்ஜுனனை விவாகம் செய்து கொண்டாள்.

(4) அவள் புதல்வன் பப்ருவாஹனன்.

(5) ஸஹதேவன் அகஸ்த்யாச்ரமம் சென்ருன்.

(6) த்ரவிட, த்ரமிட, த்ரமிழ என்பவை ஒரே பெயரைக் குறிக்கின்றன. என்பனவாம்.

ஆகையால் முற்காலத்தில் இத்தமிழ் நாடானது த்ரவிடம், த்ரமிடம் அல்லது த்ரமிளம் என்ற பெயர் பெற்றிருந்ததென்று ஆர்ய நூல்களாலறிகின்ருேம். அப்பெயர்கள் எங்ஙனம் வாய்ந்தனவோ என்பது நிர்ணயிப்பது, நிராதாரமான இந்நிலைமையில் அசாத்யமாகும்.

த்ரமிடம் என்பதும், த்ரமிளம் என்பதும் ‘ட ள, யோரபேத:’ என்ற ஸம்ஸ்கிருத விதிப்படி, ஒன்றுதான்.

‘அக்னிமீடே (ளெ) புரோகிதம்’ என்பது அக்னிமீளே புரோகிதம் என்று வருவதையும் காண்க.

த்ரமிள என்பது தமிழ் என்று எவ்வாறு மாறிற்றெனில், த்ரமிள என்னும் பதமுதலில் த்ர என்னும் கூட்டெழுத்திருக்கின்றது. அது, த்+ர்+அ என்று பிரிக்கப்படும். ஸம்ஸ்கிருதச்சொல்லில் மொழி முதலிற் கூட்டெழுத்து வருமாயின், கூட்டெழுத்தின் ஒரு ஒற்று மறைந்துவிடும்.

உதாஹரணம். சீமான், காரம், ஜோதி, தீவு, தொனி, பதுமை, வெஞ்சனம், விவஹாரம், தொக், விசன்ம், சேணி, சுதேசம், சாமி, கணம், ஜேஷ்டன், இவைகளில், இரண்டாவது ஒற்று மறைந்திருப்பதைக் காண்க. இதுபோலவே, த்ரமிள என்பதில் இரண்டாவது ஒற்று ர், மறையவே (ஜ) தமிள என்றும் பிறகு த (த) மிழ அல்லது தமிழ் என்றும் மாறியிருக்கின்றது.

தமிழ்த்தேசம்.

இப்பொழுது தமிழ்த்தேசமானது, திருப்பதி முதல், குமரிமுனை வரைக்கும், மேற்குத்தொடர் மலைமுதல், கிழக்கே வங்காள சமுத்ரக்கரை வரைக்கும் உள்ள நிலப்பரப்பேயாம்.

பூர்வ நிலைமை. ஆனால் முன்னொரு காலத்தில், இத்தேசமானது குமரிக்கும் தெற்கே விஸ்தாரமாயிருந்ததென்றும், தற்காலத்தில் இந்து சமுத்திரத்தின் பல தீவுகளாகப் பிரிந்துகிடக்கும், ஆஸ்த்ரேலியா, ஸுமாத்ரா, மடகாஸ்கர், அந்தமான், நிக்கோபார், லக்ஷத்தீவுகள், மாலத்தீவுகள், சிங்களம் முதலிய தீவுகளெல்லாம் ஒரே தரையாயிருந்ததென்றும், அஃது தக்ஷணத்துருவத்துக்குச் சமீபம் வரைக்கும், தற்கால ஆப்ரிக்காகண்டம், இந்துதேசம் இவைகளின் தொடர்ச்சியாய் ஓர் பெரிய கண்டமொன்றிருந்ததாகவும், அஃது சமுத்திரத்தில் ஆழ்ந்துபோய்விட்டதாகவும், அவைகளின் உயர்பாகங்கள்தான் இப்பொழுதுள்ள மேற்கூறிய தீவுகளென்றும், அவ்வாறு ஆழ்ந்த பூர்வ கண்டத்துக்கு லிமூரியா என்று பெயரிட்டிருப்பதாகவும், பூதத்வ சாஸ்த்ரஞ்ஞர்கள் (Geologist) கூறுகின்றனர்.

இதற்கு முக்ய ஆதாரம், மேற்கூறிய தீவுகள் அகண்ட கடலால் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும், அவைகளிலுள்ள பூர்வ குடிகளின்,

நடை, உடை, பாவனை, பாஷை முதலானவைகளும், உடற்கூறு, கபாலக்கூறு முதலான அங்கலக்ஷணங்களும் அநேக அம்சங்களில் ஒத்திருக்கின்றவென்று மனிதவர்க்க சாஸ்த்ரஞர்கள் கூறுகின்றார் கள்.

நமது பழந் தமிழ் நூலொன்றில், குமரிக்கும், பஃறுளியாற் றுக்கும் மத்தியில் ஒரு பெரிய தேசமிருந்ததாகவும், அது 700-யோஜனை தூரமுள்ளதென்றும் அது சமுத்திரத்தில் ஆழ்ந்துவிட்ட தென்றும், குறிக்கப்பட்டிருப்பதாய்த் தெரியவருகின்றது.

இப்பொழுது தமிழ் வழங்குவோரின் ஜனத்தொகை இரண்டு கோடி யென்று மதிக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்கள் பெரும் பான்மையோர், மேற்கூறியவாறு திருப்பதிக்குத் தெற்கே குமரி வரையிலும், சிங்களம், அந்தமான் முதலான இந்து சமுத்திரத் தீவு களிலும், சுமத்ரா ஜாவா, முதலான தீவுகளிலும், பர்மாவின் சில பாகங்களிலும் கூலிவேலைக்காரராக தென் ஆப்ரிக்காவிலும் வசிக் கின்றார்கள்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,
B. A. B. L.

உ

நாலடியார்
கடவுள்வாழ்த்துரை.

"வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை—யாநிலம்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

(இ-ள்) வானிடுவில்லின்—வானவிற்போல, வரவு அறியா வாய்மையால்—வாற்பாலதாகிய இடையூறு இன்னவாறுதோன்றும்

என்று அறியப்படாத சத்தியமாயிருத்தலால், கால் நிலம் தோயா கடவுளை—பாதம் நிலத்திற்படியாத கடவுளை, எம் உள்ளத்து முன்னி யவை முடிக என்று—எம்முடைய மனத்திலே நினைத்தகாரியம் நிறை வேறவேண்டும் என்று வேண்டி, யாம் நிலம் சென்னி உற வணங்கி சேர்தும்—நாம் நிலத்திற் சிரம்பொருந்தவணங்கி மனத்திற் சிந்திப் பாம் என்க.

நினைத்த காரியம் நிறைவேறும்படி கடவுளை வணங்கிச் சிந்திப் பாம் என்பது இதன் கருத்து.

"வணங்கிச் சேர்தும்" என்னும் பிரதிஞ்ஞையை "வானிடு வில்லின் வரவறியாவாய்மை" என்பது ஏதுவாய்நின்று வலியுறுத் திற்று. மங்கலாசரணமாகிய கடவுள்வாழ்த்து இடையூறுகடியும் என்று வடநூலாருங் கூறுவர்.

வானிடுவில்—இந்திரவில். வரவு என்றது வரற்பாலதாகிய இடையூற்றினை உணர்த்திநின்றது. இந்திரவில்லு இன்னவாறு தோன்றும் என்பது யாவராலும் அறியப்படமாட்டாது. அதுபோல வரற்பாலதாகிய இடையூறும் இன்னவாறுதோன்றும் என்பது அறியப்படாமையின்; அதற்கு இந்திரவில்லு உவமையாயிற்று. இக்கருத்துப் பெறுமாறு நச்சினார்க்கினியரும் "கற்றவைம்பதங்கள்" என்னும் சிந்தாமணிக்கவியுரையிலே "நூல்கள் இந்திரவில் இன்ன வாறுதோன்றுமென்று அது தோன்றும் முறைமை கூறுவாகலின் அங்ஙனந்தோன்றுகின்ற தேவர்க்கு அஃதுவமையாயிற்று. இக் கருத்தானன்றே "வானிடுவில்லின் வரவறியா" என்றார் பிறரும்" என்று கூறினர்.

இனி "வரவறியாவாய்மையினால்" என்பதற்குப் "பிறக்கும் பிறப்பின்றன்மையை யுணர்ந்து சத்தியத்தினால்" என்று உரைகூறு வாருமுளர். இவ்வுரையும் பொருந்துமா? சத்தியத்தினால் என்னும் ஏது "வணங்கிச்சேர்தும்" என்னும் பிரதிஞ்ஞையை எப்படி முடிக் கும்? அஃததற்கு ஆபாசமாகாதோ? வானிடுவில்லுக்கும் வரவுக் கும் பொதுத்தன்மையாது? இக்கவி மங்கலாசரணமன்றோ! மங்கலா சரணத்துக்கும் பிறப்புக்கும் இயைபு யாது?

கடவுள் என்பது முனிவருக்கும் பிறர்க்குஞ் சேறலாற் "கானி லந் தோயா" என்பது பிறிதினியைபுநீக்கிய விசேடணம். கடவுள் என்பது ஊர், பேர், உருவம் முதலிய எல்லாங் கடந்தவன் எனப் பொருள்படும். கட—பகுதி. உள்—ஒரு பெயர்விகுதி.

முன்னியவை என்றது நன்றுமுடிதல், சென்றுபயன்படல், நின்றுநிலவல் முதலியவைகளே.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

பொருளதிகார ஆராய்ச்சி.

(௩௦௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம் களவொழுக்கம் நிகழாநிற்பத் தலைவி காவலின் கடுமையினாலும், காமம் கைம்மிகுதலாலும், தலைவனுக்கு இரவின்கண் வரும்போது ஊறுநேரும் என்னும் அச்சத்தாலும், பிறவற்றாலும், தான் வரைவு விரும்புவதைத் தலைவனுக்குத் தோழிவாயிலாகத் தெரிவிப்பள். அதற்குத் தலைவன், அங்ஙனம் வரைந்துகொள்ளுதற்கு இடையூறு ஒன்று மின்றேல், தலைவியின் பெற்றோர்க்கு அந்தணப் பாங்கன்வாயிலாகத் தன் எண்ணத்தைத் தெரிவிப்பன். இதற்கு முன்னரே தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், முறையே, களவொழுக்கமாக நிகழ்ந்தவற்றைக் கூறி அறத்தொடுநிற்ப, நற்றாய் முதலியோர் அம் மணத்திற்கிணங்குவர். செவிலிக்குத் தோழி அறத்தொடுநிற்றலுக்கு, பத்துப்பாட்டினுள், குறிஞ்சிப்பாட்டில் "அன்னாய்வாழிவேண்டன்னையொண்ணுதல், ஒலிமென்கூந்தலென் றோழி........நோக்கம்கலங்கிக்கையற்று ஆருச்சிறுமையள்" எனத் தொடக்கத்திற் கூறியுள்ளதை உதாரணமாகக்கொள்ளலாம்.

அன்றித் தலைவன் அப்போது வரைந்துசெல்லற்கு, தன்னாலாதல், தன்னைச் சேர்ந்தோராலாதல், தலைவியைச் சேர்ந்தோராலாதல், தன் எண்ணத்துக்கு ஊறுநேரும் எனக்கருதின், தலைவியிடத்து

வரைவிடை வைத்துத் தான் பொருள்தேடப் பிரிந்து செல்வான். தன்பிரிவைத் தலைவன் தோழிவாயிலாகத் தலைவிக்குணர்த்த, அவ ளும், தோழியால் ஆற்றப்பெற்று, தலைவன்வரவினை எதிர்பார்த்து நிற்பள். பிரிந்துசென்றதலைவன், மிக்கபொருளுடன் விரைவில் திரும்பிவந்து, முன்னர்க்கூறியவாறே, தலைவியின்பெற்றோர்க்குத் தெரிவித்து அவளைக் கடிமணஞ்செய்துகொள்ளுவன்.

களவொழுக்கம் பிறரால் ஒருசிறிதும் அறியப்படாதவிடத்து மணநிகழுமாறு முன்னர்க் கூறப்பெற்றது. அங்ஙனமன்றி, தலை வனும் தலைவியும் களவிற் கூடிவருவது சிறிது சிறிதாகப்பிறர் ஐயங்கொள்ளுதற்கும் ஏதுவாம். பிறர் இத்தகைய ஐயங்கொண்டுழி, அதுபற்றித் தலைவன் தலைவியர் ஒழுக்கத்தினைக்குறித்து அலர்மொழி தோன்றினும் தோன்றும். இங்ஙனம் அலர்தோன்றியவழியும் தலைவி யிடத்து வரைவுவேட்கைநிகழும். தோழியும் தலைவனிடத்து அக் காரணத்தினையும், தலைவியின் நாணமிக்கநிலையையும், தலைவியைப் பிறர் மணக்கவிருக்கின்றாரென்பதையும் எடுத்துக்காட்டிக் கள வொழுக்கந்தவிர்ந்து கடிமணமுடித்துக்கொள்ளல் வேண்டுமெனக் கட்டுரைப்பாள்.

இந்நிலைமையுற்ற தலைவன், தான் அப்போதே வரைந்துகொள் ளுதற்குத் தடையொன்று மில்லாதவிடத்து முற்கூறியவாறே தலை வியின்பெற்றோர்க்குத் தெரிவித்து, தலைவியை வதுவையாற்றிக்கொள் ளுவான்.

அன்றி, அப்போழ்தே மணஞ்செய்துகோடற்கு இயலாதவனா யிருப்பின், வேறுவழியின்மையால் தலைவியைச் செவிலி, நற்றாய், முதலியவர் அறியாவண்ணம் தன்னுடன்கொண்டு வெஞ்சுரம்கடந்து வேற்றூர்க்குச்செல்ல விரும்புவான். தலைவியும், கற்பும் நாணும் தம் முட்பொருத நெஞ்சினளாய், முதலிற் செயற்பாலது யாதெனத் தெரி யாது கலங்குவள். பின்னர்,

* "உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

---

* தொல்காப்பியம்.

என்று இலக்கணம் கூறியாங்கு, அவனோடு உடன்போக்குக்கிசைந்து செல்லுவள். அங்ஙனஞ்சென்ற தலைவியும் தலைவனும், கொடுப்பாரொருவருமின்றித் தாமே மணஞ்செய்து கொள்ளினும் கொள்வர். அங்ஙனம் செய்துகொண்டாலும் அது இழுக்காது என்பது,

"கொடுப்போ ரின்றியுங் கரணமு முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான"

என்னும் சூத்திரத்தாற் கிடைக்கப்பெறும்.

அன்றி அவர்கள் சென்ற வழியில்,

"பொன்போலுங் கள்ளிப் பொரிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே"

என இரங்கிச் செவிலியும் பிறரும், அவளைத்தேடிச் சென்று, சுரத்திடை அவளைத் தலைவனுடன் கண்டு, பிறகு இருவரையும் மீட்டு வந்து, அவ்விருவர்க்கும் வதுவை செய்வித்தலும் உண்டு.

இவ்வாறு, இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்த காலந்தொட்டு, வதுவையாற்றுங்காலம் வரையில்களவொழுக்கம் நிகழும்.

*"மறைந்த வொழுக்கத் தோரையு நாளுந்
துறந்த வொழுக்கங் கிழவோற் கில்லை"

என்பதும்,

†"களவினுட் டவிர்ச்சி கிழவோர்க்கில்லை"

என்பதும் இலக்கணமாதலால், தலைவனால் இக்களவொழுக்கத்துக்கு ஒருநாளும் இடையீடு நேரிடாது என்பது போதரும். நேரும் இடையூறுகள், தலைவியாலேயே, காவல் அதிகப்படுதலானும், தலைவி பிறவற்றால் நிகழ்ந்த குறிகளைத் தலைவன் செய்குறியென மயங்கியதனானும், மற்றும் பிறவற்றானும் ஏற்படும்.

இக்களவொழுக்கத்துக்குக் காலவரையறை தொல்காப்பியனார் காட்டவில்லை. இறையனார் அகப்பொருளில்,

"களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டம்
திங்க ளிரண்டி னகமென மொழிப"

* தொல்காப்பியம், களவியல்.
† இறையனாரகப்பொருள்.

எனச் சூத்திரம் செய்தாரேனும், நக்கீரனர், அதற்குத் தான் இயற்றிய உரையின்கண்ணே, "இஃது உலகத்து இயல்பன்று........ உலகத் தொழுக்கத்துக்குக் காலவரையறை யில்லை." என்று அதனை மறுத்துப்பேசுவதனல் களவொழுக்கத்துக்குக் காலவரையறையில்லை எனக் கொள்ளுவதே ஏற்புடைத்தாகும்.

இங்ஙனம் கூறப்பெற்ற களவொழுக்க விஷயங்களெல்லாம் தொல்காப்பியத்தின்கண்ணும், அதன் உரையின்கண்ணும், மிக விரிவாக, உளநூற் (Psychology) கொள்கைகட்கு ஒரு சிறிதும் மாறுத, விரித்துரைக்கப்பட்டுள்ளனவெனினும், ஈண்டு விரிவஞ்சி, ஆராய்ச்சிக்கு வேண்டுவனவற்றையே எடுத்துக்கொண்டு, இதுகாறும் சுருக்கமாய்க் கூறினேம்.

இனிக் களவொழுக்கம் நிகழ்ந்தபின்னர்க் கடிமணநிகழுமாறும், அங்ஙனம் மணஞ்செய்துகொண்ட காதலர் இல்லறத்தில் நின்று ஒழுகுமாறும், ஆசிரியர் வகுத்த இலக்கணங் கருவியாக ஆராயப் புகுவாம்.

கற்பொழுக்கம்.

கற்பொழுக்கம் என்பது விதிப்படி மணஞ்செய்துகொண்ட தலைவனும், தலைவியும் அறநூல்களிற் கொள்ளற்பாலன என்பனவற்றைக் கொண்டும், தள்ளற்பாலன என்பனவற்றைத் தள்ளியும் இல்லறத்தின்கண்ணே வழுவாது ஒழுகுவதாம்.

" கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை " என்று பள்ளிக்கூடச் சிறுவர்கள் பாடமோதுகின்றூர்கள். கணவன் சொற்கு விரோதமின்றி நடப்பது கற்பென்பது இதன்பொருள்.

முன்னர்த் தாய்தகப்பனலும், பின்னர்த்தலைவனலும் இன்ன இன்னவாறு ஒழுகவேண்டுமெனத் தலைவிக்குக் கற்பிக்கப்படும் ஒழுக்கமாதலின் அது கற்பெனப் பெயர் பெற்றது. "கற்பாவது தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்" என ஓரிடத்தும்,

"கொண்டானிற் சிறந்ததெய்வம் இன்றெனவும், அவனை இன்னவாறே வழிபடுக எனவும், இருமுதுகுரவர் கற்பித்தலானும், அந்தணர் திறத்தும், சான்றோர் தேத்தும், ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன்கற்பித்தலானும் கற்பாயிற்று." எனப் பிறிதோரிடத்தும், " இவளை இன்னவாறு பாதுகாப்பாய் எனவும், இவற்கு இன்னவாறேநீ குற்றேவல் செய்தொழுகெனவும், அங்கியங்கடவுள் அறிகுறியாக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலின், அத்தொழிலைக் கற்பென்றார்" என மற்றுமோரிடத்தும் நச்சினார்க்கினியர் நவின்று சென்றனர். இக்கற்பின் தூய்மையினை நம் தமிழ்ப் புலவர்கள் மிகச்சிறப்பாகப் பலவிடங்களிற் பாராட்டியிருக்கின்றனர்.

" பெண்ணிற் பெருந்தக்க யாவுளகற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின் "

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை "

என்றார் வள்ளுவனார்.

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று "

எனத்தொல்காப்பியனாரும் கூறினார்.

கற்பின்சிறப்பு இத்தன்மைத்தாக, இனிக்களவொழுக்கம் முடிந்த பின்னர், தலைவன் தலைவியர் இல்லறம் நடத்துதற்குப் புகுமுன்னர்ச் செய்துகொள்ளும் மணத்தினது இயல்பு கூறுவோம்.

முன்னர் எண்வகை மணங்கள் இன்னவென எடுத்துச் சொல்லப்பட்டன. அவற்றை,

" அந்தணரருமறைமன்றலெட்டினுள் "

என இறையனார் அகப்பொருளினும்,

" மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள் "

எனத் தொல்காப்பியத்திலும், இம்மணங்கள் மறையோர் வகுத்தன என வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றன.

மற்றும்,

"பொய்யுங் களவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்னும் சூத்திரத்தாலும், அதற்கு நச்சினார்க்கினியர் "முதனூலாசிரியர் கூறியவாறே களவுநிகழ்ந்தபின்னர்க் கற்புநிகழ்ந்தவாறு கூறித்......தாம் நூல் செய்கிற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி, இருடிகள் கரணம்யாத்தவாறுங் கூறினர். அக்களவின்வழி நிகழ்ந்த கற்பும் கோடற்கென்றுணர்க." என்றுரைகூறியதாலும், இம்மண வேறுபாடுகளும், அவற்றுக்கு விதித்துள்ள விதிகளும், ஆரியர்களால் தமிழ்நாட்டில், வழக்கம்பெறுவன வாயினஎனக்கொள்ளக் கிடக்கின்றது.

எனவே, 'பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்' கரணம் ஏற்பட்டதென்றால், கந்தருவத்திற்குச் சிறந்தகளவு நீக்கப்பட்டதோ என்றும், அங்ஙனம் களவொழுக்கம் நிகழுமேல், அது 'ஐயர் யாத்த' கரணவிதிப்படி கடியயற்பாலதாயிற்றே என்றும் ஐயப்பாடு நிகழ்தல் கூடும். அக்களவின்வழி நிகழ்ந்த கற்பும் கோடற்கு" என மேலே காட்டிய நச்சினார்க்கினியர் உரையினாற் களவொழுக்கந் தள்ளப்படவில்லை யென்பதும், "ஒருவனையும் ஒருத்தியையும் எதிர் நிறீஇ, இவளைக்கொள்ள இயைதியோ நீ எனவும், இவற்குக் கொடுப்ப இயைதியோநீ எனவும் இருமுதுகுரவர் கேட்டவழி, இவர் கரந்தவுள்ளத்தான் இயைந்தவழிக்கொடுப்ப ஆகலின், அதுதானே ஒருவகையிற் கந்தருவ வழக்கமும் ஆம்" என மீண்டும் அவர் கூறுவதால் மணமக்கள் சம்மதம் பெற்றே மணவினை நிகழ்ந்ததென்பதும் பெறப்படும்.

இப்படி மணஞ்செய்யும்போது தலைமகன் தலைவிக்கு அணிகலன் பரிசமாக அளித்து, பெண்கொடுத்தற் குரியவர்களாகிய "தாயொடு பிறந்தாரும், தன்னையரும், தாயத்தாரும் ஆசிரியனும்" முதலியோர், பெண்ணைக்கொடுக்கத் தான் கொள்ளுவான். இதனால், இக்காலத்து, மாப்பிள்ளைகளுக்கு வரதக்ஷிணைகொடுக்கும்வழக்கம் அக்காலத்து இல்லை என்பது தெரியவரும். மற்றும் "முலைவிலை செப்பல்", "கன்யாசுல்கம்" முதலிய தொடர்மொழிகளால், பெண்ணுக்கே மணமகன் முற்காலத்தில் பரிசம் அளித்தனன் என்பது தெள்ளிதின் உணரலாகும். களவின் கண்ணே தலைவனோடு உடன் போக்கிற்குத் தலைவி

இணங்கி, வேற்றூர்க்குப் போம்போது, அங்குக் கொடுக்கும் மரபினர் ஒருவருமிலராதல்பற்றி, பிறரால் கொடுக்கப் பெறுமலே, தான் தலைவனை மணந்துகொள்ளுதலும் அமையும், இதற்குச் சூத்திரம்,

"கொடுப்போ ரின்றியுங் கரணமு முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான" என்பது.

இதுகாறுங் கூறியவாற்றால் மணவினை நிகழுங்கால் மணமகள் காம இன்பந்துய்க்கத் தக்க பிராயத்தளாய் இருத்தல்வேண்டுமென்பது அறிந்துகொள்ளற்பாலதெனினும், வெளிப்படையாகவே, நச்சினார்க்கினியர் கல்யாணம் நடக்கும் முதல்

"மூன்று இரவில் முயக்கமின்றி.........ஒழுகி.......நிகழ்ந்த மனக்குறை தீரக் கூடிய கூட்டத்தின்கண்; அது நாலாநாள் இரவின் கண்ணதாகும்" எனவும், தலைவன் தலைவிக்குக் கூறுங் கூற்றாக, அவ்வுரையாசிரியரே மீண்டும், "முதனாள் தண்கதிர்ச்செல்வற்கும், இரண்டாநாள் கந்தருவருக்கும், பின்னாள் அங்கியங்கடவுட்கும் அளித்து, நான்கா நாள் அங்கியங்கடவுள் எனக்கு நின்னையளிப்ப, நான் நுகர வேண்டியதாயிற்று என வேதங் கூறுதலால்" எனவும் கூறியதனால், தலைவி தலைவனால் முயங்கி இன்பம் நுகரும் பருவத்தினள் ஆதல் வேண்டும் என்பது போதரும். ஆதலில் இக்காலத்துத் தமிழர்களிடத்துப் பெரிதும் காணப்படும் 'பால்யவிவாஹம்' என்பது அக்காலத்து வழங்கவில்லை என்பது இவ்வாராய்ச்சியினால் அறியப்பெறும்.

(தொடரும்.)

வே. முத்துஸாமி ஐயன்.

ஆழ்வார் திருநகரிச் சாசநங்கள்.

XIII.

நம்மாழ்வார் ஸந்நிதி. வடக்குப்ரகாரம். மத்தியபாகம்.

காலம் :— ௵

விஷயம் :— ஆழ்வார் மார்கழித்திருவத்யயந உத்ஸவத்துக்கு அமித குணவளநாட்டுக் கழுதூர் தானம்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ மாடக்குளக் கீழ்மதுரைக் கோயிற் பள்ளியறைக்கு .... டடி ... ஸ்வாமிகள் கஷாயலநம் செய்வா (?) .... பருமசெய்ய ....

(2) திருப்படிமாற் றுள்ளிட்டு வேண்டுவனவுக்கு அமிதகுணவ .... (ற்குளத்து நீர்நக்கலுக்கு மேற்கும் தென்னெல்லை அம்புளிக்குளத்து எல்லைக்கு வடக்கு)

(3) குளத்து வயலுக்கும் வழிக்கும் தெற்கும் இன்னான் .... (மூன்றுவதின் எதிர் ஏழாமாண்டுமுதல் அந்தராயமும்காரிய வாராட்சியும் கண்டாள்)

(4) னுமென்று பல்லவராயர் நமக்குச் சொன்னமையில் இவ...... வேண்டுவனவுக்கு அமிதகுணவளநாட்டு கீழ்வகைக் கழுதூருக்குக் கீழெல்லை)

(5) லை அப்பன்குளத்து எல்லைக்கு வடக்கும் மேலெல்லை...லல... ....(க்கும் வழிக்கும் தெற்கும் இந்நான்கெல்லைக்குள்பட்ட ந—ச நிலமுங் கருஞ்செ)

(6) யமுங் காரியவாராட்ந தண்டாளன்தரும் அச்சும் உ (.......ந்த ரச் சொன்னோம் இப்படி சந்த்ராதித்தவற்செல்வதாக கல்விலும் செம்பிலும் வெட்)..................................

(7) காமனுன வில்லவராஜன் எழுத்து. ... அருளிச்செயல் திருவழுதிவளநாட்டுத் திருநகரி (?) பொலிஞ்சுநின்றருளிய பரமஸ்வாமிகள் கோயில் ந—செய்வானுக்கும் ஸ்ரீவைஷ்ணவருக்கும் இவ்வாழ்வார்....... ...த.........வேண்டுவனவுக்கு அமிதகு

(8) ணவளநாட்டுக் கீழ்வகைக் கழுதூர்க்குக் கீழெல்லை மறுக்கத்து வயலுக்கும் புற்குளத்து நீர்நக்கலுக்கு மேற்கும் தென்னெல்லை அம்பு.........து எல்லைக்கு வடக்கும் மேலெல்லை கல்லனூர் குளத்து எல்லைக்குக் கிழக்கும் வடவெல்லை கண்ணங்குளத்து வயலுக்கும் வழிக்கும்

(9) தெற்கும் இந் நான்கெல்லைக்குள்பட்ட நீர்நிலமும் கருஞ்செய் புன்செய்யும் பதின்மூன்றுவதின் எதிர்ஏழாமாண்டுமுதல் ...... ராயமுங் காரியவாராட்சியும் தண்டாளன் தரும் அச்சும் உள் படத் தேவதான இறையிலியாக இடப்பெறவேணுமென்று பல்லவராயர் நமக்கு

(10) சொன்னமையில் இவ்வாழ்வார் மார்கழித்திருவத்யயநத்துக்குத் திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டுவனவுக்கு அமிதகுணவள நாட்டுக் கி...க்கழுதூர்க்குக் கீழெல்லை மறுக்கத்துவயலுக்கும் புற்குளத்து நீர்நக்கலுக்கு மேற்கும் தென்னெல்லை அம்புளிக் குளத்து எல்லைக்கு வடக்கும் மேலெல்

(11) லை கல்லனூர்குளத்து எல்லைக்குக் கிழக்கும் வடவெல்லை கண் ணங்குளத்துவயலுக்கும் வழிக்கும் தெற்கும் இந்நான்கெல் லைக்கு ......நீர்நிலமும் கருஞ்செய்யும் பதின்மூன்றுவதன் எதிர் ஏழாமாண்டுமுதல் அந்தராயமும் காரியவாராட்சியும் தண்டா ளன் தரும் அச்சும்உள்படத்தேவ

(12) தான இறையிலியாய் இருப்பதாக இட்டு நம் கேழ்வியும் தரச் சொன்னோம் இப்படி சந்த்ராதித்தவற் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெ.........க்கொள்க இவை செவ்விருக்கைநாட்டு அச்சுதவயல் அரையன் தெ(ய்)வச்சிலையானான அரிந்தவ(ம?)ன் விழுப்பரையன் எழுத்து இவை செவ்விருக்கைநா

(13) ட்டு அச்சுதவயல் அரையன் நாராயணதேவனான பாண்டிய தரையன் எழுத்து.

A. M. S.

XIV.

ஷை வடக்குப்ராகாரம் மத்தியபாகம்.

காலம். ஜடாவர்மன் குலசேகரதேவற்கு யாண்டு ௰௩.
விஷயம். சுவாமி பொலிஞ்சுநின்றபிரானுக்கு சிலர் கழுநூர் விற்றுக்கொடுத்தது.

சீர்மெய்க்கீர்த்தி (அகவல்).

(13) பூவினிற் கிளத்தி மேவி வீற்றிருப்ப
மேனில மாதர் நிதபிநபண (?)
......போ-ர்-மடந்தை-செயப்புயத்-திருப்ப
மாக்க(லை)மடந்தை வாக்கினில் விளங்க
திசைஇரு நான்கும் இளநிலா வெறிப்ப,
மனுநெறி வளர மறைநெறி திகழ
சுடர்நெ(14)றி சமையங்களறர்(?) திளைப்ப
கான வேங்கை மைவில் லுடன்துரந்து
மீனவன் சிங்கா சனத்து வீற்றிருப்ப
எண்...சுமந்த ஏழ்பொழில் வெண்குடை
.............................நிழற்ற
செங்கோல்நடப்ப..................
..................(15)றையபணிய
இருநேமி மரைவு மொருநேமி ஓங்க
இன்னமு தாகில(?) இயலிசைநாடகம்
மன்னவர் மாமணி முடிசூடி வெற்பென

(உரை நடை).

ஓங்கிய வீரசிங்காசனத்து கற்பகநிழற்கீழ்கலைவல...............

(16) ந்தருளிய ஸ்ரீகோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேகரதவற்கு யாண்டு௰௩வதி எதிர்ஏழாமாண்டு இடப நா(யி)ற்றுப்பதிந்ஞலாந்தியதியும் பூவ-பக்கத்துது யோதசியும்......................................

(17) குணவளநாட்டு அக்கிரமகோபநல்லூர் அரையன் குலசேகரனான தெ(ன்)னவன் கலிங்கத்தரையனும் அறந்தாங்கிகணவதியும் கோன்புலிக்குட்டியும் அப்பியாண்டானும் உய்யவந்தான் நக்கப...

(18) யோமாய் ஆண்டு அநுபவித்துவருகிற கழுதூர் இப்பொலிஞ்சு நின்ற பிரானுக்குத் திருவிடையாட்டமாக முன்பே வரியிலே இட்டுவந்து கீழ்வகை நாடாய் திருவாழிக்கல்லு நாட்டி குடுத் தமையில்...

(19) ள்ஞேக்கன கிணறும் மீன்படுபள்ளமும் தேன்படுபொதும்பும் உடும்பொடியும் அமைத(?)வளியும் புற்றுந் தெற்றியும் நத்தமும் நத்தப்பாழும் சுடுகாடும் படுதுறையும் மற்றும் ஏற்பேற்பட்....

(20) குலசேகரன்னான தென்னவன் கலிங்கத்தரையனும் அறந் தாங்கி கணவதியும் கோள்புலிக்குட்டியும் அப்பி ஆண்டானும் க—ங—கான—சான கலாவ (?) சீராமதேவன்சக்கரபாணியும் இவ்வனைவோமும் இப்படி விற்றுக்குடுத்த எங்கள்ளோபாதி செம்பாதி (?)

(21) யும் எங்களில் விசைந்த விலைப்பொருளுங் குழம்புபிள்ளை பாண் டியதரையற்கு நாங்கள் ஒற்றிவைச்ச ஒற்றிக்கலத்தில் பட்ட ஆயச்... விலைப்பொருளாகச் சாத்தி நீக்கி தம்மிலிசைந்த விலைப் பொருள் எல்லாம் கையிலே அறக்கொண்டுவிற்று விலைப்பிர மாணம்பண்ணிக்குடுத்தோம் பொலிஞ்சுநின்றபிரான் திருநாம த்திலே இவ்வனைவோமும் இப்படிவிற்றுக்குடுத்த எங்கள் ...... இவ்விலை ஓலையும் பொருள்ச்—சல்ஓலையு ஆவுதாகவும் இதுவல் லது வேறுவிலை மாவறுதிப்பொருளாசறுதி

(23) ப்பொருள்ச்செலஓலை காட்டவுங் கடவதன்றி விலைக்குறவிற்று பொருளறக்கொண்டு விற்று விலைப்பிரமாணம்பண்ணிக்குடுத் தோம் பொலிஞ்சு............................ல் அரையன் குலை சேகரனான தென்னவன்கலிங்கத்தரையனும் அறந்தாங்கி கண வதியும் கோள்புலிக்குட்டியு..........................

(24) அப்ப ஆண்டானும் உய்யவந்தான்நக்கப்பட்டனும் சீராமதே வன்சக்கரபாணியும் இவ்வனைவோமும் இப்படிசம்மதித்து யிவ்

வி யன் குலசேகரனான தென்னவன் கலிங் கத்தரையன் எழுத்து இப்படி அறிவேன் தென்னவன் ஆதித்த சூளாமணி மூவே

(25) ந்தவேளான் எழுத்து இவை உய்யவந்தான் நக்கப்பட்டன் எழுத்து. இப்படிக் கிவை சீராமதேவன் சக்கரபாணி எழுத்து. இப்படி சம்மதித்துவிற்று..........பிரமாணம் எழுதினமைக்கு இவை (?) கோள்புலிக்குட்டி எழுத்து........ாநது அப்பி ஆண் டான் தற்குறிவாதனமைக்குதற்கு (?)

(26) பாட்டே ஆச (?) திருவாசல் ஆரியப்பட்ட மாதவன் வாசுதே வன் எழுத்து. இவை அறந்தாங்கி கணவதி எழுத்து.

A. M. சடகோபராமாநுஜாசார்யன்,
நேஷநல்-ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

உ

திருக்குறள்,

"பொருள்" மயக்கம்.

"பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்கள் இல்"

என்னும் திருக்குறளில் "பொருள்" என்னுமொழிகள் ஈண்டு ஆராய்ச்சி விஷயம்.

ஸ்ரீ சுப்பிரமணிய ஆசாரியர் அவர்கள் இயற்றிய ஔவையார் சரித்திரம் முதலாம் பக்கத்தில் "அநேகர் பெண்களை ஆடுமாடுகளா கவும் அவைகள் தினவு நீங்க உராய்ந்துகொள்ளும் கட்டுத்தறிகளா கவும் நினைத்துவருகிறார்கள். இக்குற்றமுடைய கொள்கை பாமரர் கள்மட்டுமே நில்லாமல் பாவலர்களுள் முதற்பாவலராகிய திருவள் ளுவ நாயனார் நெஞ்சத்தையுமன்றோபற்றியது! அதன் வலியேவலி!

அதன் வீரமே வீரம்! 'பிறனில்விழையாமை' என்னும் குறளதிகாரத்தின் கீழ்ப்பிறன்மனையாள் என்று சொல்லவந்தவர் 'பிறன் பொருளாள்' என்று கூறியிருக்கிறார். இதற்குப் 'பிறர்க்குப்பொருளாந் தன்மையுடையாள்' என்றுபரிமேழலகரும் பொருள் கூறியிருக்கிறார்" என்றும் அப்பக்கத்தின் அடியில் உடுக்குறியிட்டு "பொருளாள்' என்பதற்கு அறத்திற்கும் இன்பத்திற்கும் கருவியாகிய சிறப்புடைய பொருள் போன்றவள் என்று பொருள் கொள்வாருமுளர்" என்றும் எழுதியுள்ளார்.

இப்புத்தகமானது எனக்கு ஒரு வாரத்திற்கு முன் கிடைத்தது. இதில் ஆசாரியர் அவர்கள் திருவள்ளுவர் கருத்து மாறுபட்டதே என்பதைப்பற்றி மனம்வருந்துகையில் ஒருவாறு எனக்கும் ஐய நிகழ்ந்து ஆராய்வுழி திருவள்ளுவர் கருத்தை உற்றுநோக்காத குறையேயன்றி வேறின்றெனப் புலப்படுகின்றது. அதனை ஒருவாறு விளக்குவாம்.

"வாழ்க்கைத்துணைநலம்" என்னும் அதிகாரத்தில் திருக்குறள் ஆசிரியர் பெண்களின் இலக்கணத்தை எடுத்துக்கூறுவதில் "தற்காத்துத்தற்கொண்டாற்பேணித் தகைசான்ற, சொற்காத்துச்சோர்விலாள்பெண்" என்றருளிச்செய்தனர். "தற்கொண்டாற்பேணி" என்பதால் இனிய ஆகாரத்தாலும் இனிய ஒழுக்கத்தாலும் தன் கணவனுடைய உடலையும் உயிர் ஒழுக்கத்தையும் பேணுதலும், "தகைசான்றசொற்காத்து" என்பதால் உபயகுலத்திற்கும் மேம்பட்டதாகிய கீர்த்தியை நிலைநிறுத்தலுமாகிய தன்மைகள் பெண்களுக்கு உரிமையாக்கப்பட்டிருத்தலால், ஆசாரியவர்கள் அபிப்பிராயப்படி சாமாந்யமான அநுபவப் பொருள்களில் ஒன்றாக மகளிர் மதிக்கப்பட்டவரல்லர் என்பது திண்ணம்.

ஆகவே "பொருள்" எனுமொழிக்கு உரிய கருத்துகளை ஆராயின் திருவள்ளுவர் கருத்து வெள்ளிடை விலங்கல்போல விளங்குவதாகும். நிற்க,

"பொருள்" எனுமொழி பலபொருள் குறித்த ஒரு சொல்லேயாம். (1) "பொருள் சேர்புகழ்" (2) "பொருளற்றார் பூப்பர்"

(3) "தம்பொருள் என்பதம்மக்கள்" (4) "எண்பொருளவாகச் செலச்சொல்லி" (5) "சினத்தைப்பொருளென்று கொண்டவன்" என்னும் திருக்குறள் உறுப்புகளில் பிரயோகமான "பொருள்" என்னு மொழியானது முறையே (1) மெய்ம்மை (2) செல்வம் (3) மக்கள் (4) அர்த்தம் (5) கருதுபொருள் அல்லது பயன் எனப் பலபடப் பொருள்படுகின்றது. இவற்றுள் (1) மெய்ம்மை என்னும் பொருளுக் கேற்ப வடமொழியில் உள்ள "ஸத்" என்னும் பதத்திற்கு 'பொருள்' என்னும் மொழி தமிழ்ப் பிரதிபதமாகும். ஆகவே "ஸதீ" என்னும் வடமொழிக்கு "பொருளாள்" என்பது தமிழ்ப்பிரதி பதமாகலாம். ஆகவே "பொருளாள்" என்பது - ஸதீ அல்லது கற்புடைய மனைவி எனப்படும், அல்லது - (5) பயன் எனும் பொருளில்—

அகரமுதல - ஆதிபகவன் முதற்று என்பனபோல "பிறன் பொருளாள்" என்பதைத் தொடர்மொழியாக்கி பிறனை (உயர்வற உயர்) பொருளாக அல்லது கருதுபொருளாக அல்லது பயனை உடையவளெனப் பொருள்கொண்டு "தெய்வந்தொழஅள் கொழு நற் றொழுதெழுவாள் என்ற திருக்குறளுக்கேற்பப் பொருத்திக்காட் டவுங்கூடும்.

அவ்வாறே "அறம்பொருள் கண்டார் என்பதும் அறத்தைப் பொருளாகக்கொண்டவர் எனப் பொருட்படுத்தி இதற்கு அடுத்த குறளாகிய "அறன்கடை நின்றாருளெல்லாம்" என்பதில் அடங்கிய பொருளுக்குப் பொருத்திக்காட்டுதல் உசிதமாகின்றது. ஆதலால் 'அறம்பொருள்கண்டார்" என்பதில் பொருள் கண்டார் என்பதற்கு பொருள் நூலை ஆராய்ந்தறிந்தவர் எனப் பொருள்கோடல் ஈண் டைக்கு ஏற்குமோ என்பது ஆராயத்தக்கது.

இலக்குமணப்போற்றி,

12-9-13. தச்சநல்லூர்.

ஸ்ரீமான்

பொ. பாண்டித்துரைத்தேவர்

தமிழ்ப்புத்தகசாலை. (சேலம்.)

:(o):

உயர்தனிச் செம்மொழியாகிய அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழி நாளுஞ் செழித்தோங்க, மதுரையம்பதியில் நான்காஞ்சங்க மொன்றுநிறுவி, அக்கிராசனாதிபதியாயமர்ந்தருளி, தம்வாழ்நாண் முழுமையும் மனமொழி மெய்களாற் பெரிதுமுழைத்துத் தமிழுலகம் செய்த தவக்குறையான் விண்ணுலகப் பெருவாழ்வெய்திய ஸ்ரீமான். பொ. பாண்டித்துரைத் தேவரவர்களைப்பற்றி, சேலநகரில் நடந்தேறிய அநுதாபக்கூட்டத்தில், அன்னவர் ஞாபகச்சின்னமாக ஒரு தமிழ்ப்புத்தகசாலை இந்நகரில் அமைத்தல் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட விஷயம் முன்னரே நம் 'செந்தமிழ்ப்' பத்திரிகையில் வெளிப்போந்தது அன்பரனைவரும் அறிந்ததே.

அத்தீர்மானத்தை நிறைவேற்றற் கேற்பட்ட காரியநிர்வாக சபையின் காரியதரிசியாகிய சேலம் முனிசிபல் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் பிர்ம்மஸ்ரீ டி. எஸ். நடராஜ ஐயரவர்கள் சுமார் ஒன்றரை வருடமாக நகரமாந்தர்களிடமிருந்து சேகரித்த 400 ரூபாய்களுக்கு இலக்கண விலக்கியங்கள், வசனநூல்கள், இக்காலத்தில்வெளிப்போந்துள்ள நவீனங்களென்றுவழங்கும் நாவல்கள் முதலியவற்றுள் முக்கியமான புத்தகங்களை வாங்கி, 'பாண்டித்துரைத்தேவர் தமிழ்ப் புத்தகசாலை'த் திறப்புக்கொண்டாட்டத்தைக் கடந்த ஆகஸ்டுமீ 28உ வியாழக்கிழமையன்று மாலை மணிக்குச் சேலம் காலேஜில் யாவரும் வியந்து களிப்புறும்வண்ணம் நன்குநடைபெறச் செய்தனர். அப்பெருஞ்சபை, இந்தியா சட்ட நிரூபணசபை யங்கத்தினராகிய கனம் சி. விஜயராகவாசாரியாரவர்களும், சென்னை சட்ட நிரூபண சபை யங்கத்தினராகிய கனம் பி. வி. நரசிம்மையரவர்களும், சேலம் காலேஜ் தலைமையதிகாரியும், தமிழபிமானியும், காரிய நிர்வாக சபையின் அக்கிராசனாதிபதியுமாகிய மிஸ்டர். ஸ்பென்ஸர் ஏ. ஷெட்டி-

துரையவர்களும், ஏனைய கனதனவான்களும் எழுந்தருளியிருந்தமையின், பாண்டித்துரைத்தேவரின் என்றுமழியாப் பெரும் புகழெனவழகுபெற்றுத் திகழ்ந்தோங்கியது. அம்மகானின் சிவஞானத்திற்கேற்ப டிப்டிகலெக்ட்டர் மகா-௱-௱-ஸ்ரீ ராய்பஹதூர் டி. என். சிவஞானம் பிள்ளையவர்கள் சபாநாயகராக வீற்றிருந்து சிறப்பித்தனர்.

முதலில் கடவுள் வணக்கம் முடிவு பெற்றதும், சபாநாயகர் முன்னுரையாக, தமிழ்ப்புத்தகசாலையின் பெருமையையும், சர்வகலா சங்கத்தார் தமிழ்முதலிய தாய்மொழிகளைப் புறக்கணிப்பினும், காருண்ய அரசாங்கத்தார் அவ்வாறின்றி மிக்க அவாவுடையராயிருக்கின்றனரென்றும், தற்கால விர்த்திக்கேற்பத் தமிழகராதி யொன்று பதிப்பிக்க இலட்சரூபா அவர்கள் அளித்ததே அவர்கள் அவாவினைக் காட்ட வல்ல அறிகுறியாமென்றும் புகன்று ஆசனத்தமர்ந்தனர்.

பின்னர், காரியதரிசி மிஸ்டர் டி. எஸ். நடராஜ ஐயர், பாண்டித்துரைத்தேவர் தமிழகத்திற்குப் புரிந்துள்ள அரியபெரியவுபகாரத்தையும், அவரது புகழுடம்பாகிய தமிழ்ப்புத்தகசாலையின் வரலாற்றினையும், தனிக்கட்டடங்கட்டித் தமிழ்ப்புத்தகசாலையைத் தழைத்தோங்கச் செய்வது இந்நகரமாந்தரின் இன்றியமையாக் கடமையென்பதையும் வற்புறுத்திக்கூறி, நம்தாய்மொழிகட்குச் சர்வகலாசாலையாரால் நேர்ந்துள்ள பெருங்குறையை அருளுடையரசாங்கத்தார் விரைவில் அகற்றுவரென்றும், அதற்கு அநுகுணமாக, சட்டநிரூபண சபையங்கத்தினராய் விளங்கும் மகான்களும் இவ்வரிய சமயத்தை வீணாக்காது அரசாங்கத்திற்கு எடுத்துரைத்துத் தேசோபகாரிகளாகத் துலங்கவேண்டுமென்றும் உற்சாகத்துடன் உபந்நியாசித்தார்.

அதன் பிறகு, காரியநிர்வாகசபை யக்கிராசனாதிபதியாகிய துரையவர்கள் முன்வந்து, தமிழ்மொழி உலகினுள்ள சிறந்த பாஷைகளில் ஒன்றென்பதற்கோரையமில்லையெனவும், தமக்குத் தமிழினிடத்துள்ள தவலருமன்பிற்கு அளவேயில்லை யெனவும், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர், மில்டன்முதலிய நூல்களைக்கற்றுக் களிப்பதுபோல் தமிழினும் கம்பர், திருவள்ளுவர் முதலிய அரிய நூல்களை ஆராய்ந்து ஆனந்திப்பது அறிவுடையோர் கடமையெனவும், இக்கலாசாலையினின்று மதுரைத் தமிழ்ச்சங்கப் பரீக்ஷைக்குச் சென்ற மாணவர்கள்

வருடந்தோறும் இராஜதானிக்கு முதலாகத்தேறிப் பரிசுபெற்றுள்ளாரெனவும், பாண்டித்துரைத்தேவர் ஞாபகச்சின்னமாக இப்புத்தகசாலை இங்கு ஏற்பட்டதைப்பற்றித் தமக்குண்டாகிய பேரானந்தத்திற்கு அளவேயில்லையெனவும், தமிழபிமானம் பொங்கித்ததும்பப் பேசினர்.

பின்னர் சபாநாயகர் தம்திருக்கையால் தமிழ்ப் புத்தகசாலையைப் பேரானந்தத்துடன் கனவான்கள் கரகோஷஞ் செய்யவும், மாணவர்கள் களிகொண்டு ஆரவாரிக்கவும் திறந்தருளினர், உடனே 1912-ம் ௵த்தில் தமிழ்ச்சங்கப் பரீக்ஷையில் இராஜதானிக்கு முதலாகத் தேறிய மாணவர் மிஸ்டர். வி. டி. கோதண்டராமையருக்குப் பதக்கப் பரிசு அன்னவரால் அளிக்கப்பட்டது.

கடைசியாக, சபாநாயகர் முடிவுரை கூறத்தொடங்கி, இப்புத்தகசாலையைப்பற்றித் தமக்குண்டாயகளிப்பாங்கடலுக்கோர் கரையிலதென்றும், இதிலுள்ள புத்தகங்களைக் கவனித்ததில் மாணவர்கள் மாத்திரமன்றிப் பெரியோரும் படித்தறிதற்குரிய பலபுத்தகங்கள் பொதிந்துளவென்றும், நம் நண்பர் மிஸ்டர். நடராஜ ஐயரவர்கள் மிகச்சிரமமெடுத்துக்கொண்டு இவ்வரிய செயலைச் செய்ததற்கு நாமெல்லோரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோமென்றும், கனதனவான்கள் இரண்டு பீரோக்களை இருபது பீரோக்களாக்கி விடுவார்களென்பது நிச்சயமென்றும் அன்பு மீக்கூரப் பகர்ந்தனர்.

சபாநாயகர்க்கும், துரையவர்களுக்கும், காரியதரிசிக்கும் மலர்மாலையணிந்து, சபையோரனைவர்க்குங் கற்கண்டு வழங்கியபின்னர் சபைகலைந்தது. சுபம்.

இங்ஙனம்

தமிழ்விருப்பன்,

சேலம்.

மதிப்புரை

1. திருக்குறள் வசனம்:-இது மதுரைத்தமிழ்ச்சங்க வித்வான் ஸ்ரீமத், மு ரா. அருணாசலக்கவிராயரவர்களால் திருக்குறளினுரைப் பொருளைத் தழுவித் தெளிவான தமிழ்நடையி லெழுதப்பட்டிருக்கிறது. திருக்குறட்பொருளை முறையா லுரையாலோதியுணர வல்லாரல்லா ரெல்லோரும் அதனையெளிதினுணர்தற் கிது பெரிது முபகாரமாகு மென்ப தெமதுதுணிவு.

இப்புத்தகத்தைப்பற்றிப் பிரபலபண்டிதர்களா லெழுதப்பட்ட அபிப்பிராய பத்திரங்கள் பல இப்புத்தகத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றன, அவற்றாலும் இப்புத்தகத்தின் அருமை அறியக்கிடக்கின்றது. இலக்கண நூல்கள் வசனநடையி லெழுதப்பட்டவையே இக்காலத்து மாணவர்களுக்கு மிகப்பயன்படுதல்போல இதுவும் மிகவும் பயன்படத்தக்கதென்பதிற் சிறிதுமையமில்லை. இதன் விலை ரூபா 1—4—0; தபாற் செலவு வேறு. வேண்டுவோர் ஸ்ரீமத்—மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள், வடக்காவணிமூலவீதி, மதுரை.' என்ற விலாசமெழுதிப் பெறலாம்'

---

2. தமிழன்:—இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்து உப அக்கிராசனதிபதியும், தமிழபிமானியும், கனதனவானுமான கானாடுகாத்தான் ஸ்ரீமாந் S. R. M. C. T. பெத்தாச்சிசெட்டியார் அவர்கள் பொருளுதவியால் திருவநந்தபுரம் சென்ற்ஜோஸப்ஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா ஸ்ரீ முத்துஸ்வாமிப்பிள்ளை அவர்கள் பத்திராதிபத்தியத்தில் நடைபெறும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

இதில், தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய இலக்கணம், இலக்கியம், சரித்திரம், சாத்திரம் இவற்றின் சம்பந்தமான விடயங்களும், ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட செய்யுட்களும், நூதன கவிகளும், மகான்களின் சரித்திரங்களும், அவர்கள் வாய்மொழிகளும், சிறுகதைகளும், மாணவர்க்குரிய விஷயங்களும், போட்டி வியாசங்களும், சமாசாரத்திரட்டும் முதலிய பல விஷயங்கள் வெளியிடப்படு

மென்று தெரிந்து உவப்படைகிறோம், முதற்பிரதி விஜயதசமியன்று (அக்டோபர்மீ 9ஆ) வெளிவருமென்றும், இப்பத்திரிகைக்கு வருடம் ஒன்றுக்குப் போஷகர்கள் 4-ரூபாயும் சந்தாதார்கள் 2 ரூபாயும் வெளிநாட்டுச் சந்தாதார்கள் 3-ரூபாயுமாகச் செலுத்தவேண்டுமென்றும், உபந்யாஸத்தில் ஜயம்பெறும் மாணவர்களுக்கு உபந்யாசத்தின் தரத்திற்கேற்பத் தமிழ்ப்புத்தகங்கள் பரிசளிக்கப்படுமென்றும், முதன் மூன்றுமாதங்களுக்குள் ஒருவருடச்சந்தா முன்னதாகச் செலுத்துமவர்களுக்கும் போஷகர்களுக்கும் 8 அணு விலையுள்ள கற்பகவல்லியென்னும் நாவல் இனமாகக் கொடுக்கப்படுமென்றும், பழக்கமில்லாதவர்களுக்கு முன்பணமின்றிப் பத்திரிகை யனுப்பப்படமாட்டாதென்றும் நோட்டீஸில் கண்டிருக்கிறது. இப்பத்திரிகையைத் தமிழபிமானிகளெல்லோரும் வாங்கி ஆதரித்து வருவார்களென நம்புகிறோம்.

---

3. வண்ணைவைத்தீசர் ஒருதுறைக்கோவை :— இது வண்ணைநகர் வித்வான் ஸ்ரீமத். க. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்களால், அகப்பொருட்டுறையுள் "இடையூறுகிளத்தல்" என்னும் துறையின் ஒருபகுதியை விடயமாகக்கொண்டு நூறுகட்டளைக்கலித்துறைச் செய்யுளாற் செவ்விதாகப்பாடப்பட்டிருக்கிறது. இதற்குப் பல புலவர்களாற் கொடுக்கப்பட்ட சிறப்புப்பாயிரச் செய்யுள்கள் பலவுள்ள, அவற்றாலும் இதன் சிறப்புநன்கு விளங்கும். இதன் விலை 30 சதம்.

---

4. "அத்தாட்சிப்பிரமாண சூத்திரம்" என்னும் சாட்சிநூல்:-இஃது இலங்கை சுப்ரீங்கோர்ட் நியாயதுரந்தரராகிய யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஸ்ரீமான் நமசிவாயம் சிவக்கொழுந்து அவர்களால் ஆங்கிலத்தில் நின்று தமிழிற் சூத்திரரூபமாக மொழிபெயர்க்கப்பட்டது. இதில் விடயத்தொடர்பு, ருஜு, சாட்சிகொடுவோரும் அதன்பயனும் என்னும் விஷயங்கள். 11 அத்தியாயங்களாற் பகுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நூல், நியாயஸ்தலங்களில் வாதியும் எதிரியுமாகி வழக்குத்தொடர்பவர்களும், சான்றுகூறுமவர்களும் பஞ்சாயத்தில் நியாயாதிபத்தியம் வகிப்பவர்களுமாகிய தமிழ்மக்களுக்கு மிகவும்

பயன்படத்தக்கது. ஆங்கிலத்துயர்தரக் கல்வியிற்றேர்ந்த தமிழ்ப் பண்டிதர்களாற் றமிழுலகுக்குச் செய்யப்படுங் கடமைகளி லிஃ தொன்ருக மதிக்கப்படும்.

5. புட்பபந்தம்:—இது, பறங்கிப்பேட்டை வித்வானும், பென் ஷன் ஓவர்சீயருமான ஸ்ரீமத். ப. சு. இலக்குமணபிள்ளை அவர்களால் ஸம்ஸ்கிருதத்தில் நின்று தமிழில் வசனநடையாக மொழிபெயர்க்கப் பெற்றுச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. இதில் மறைக்குறிகள் மிக விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணு 4.

---

6. திருவாரூர்ப்பன்மணிமாலை :— இது வைத்தியநாததேசிகரால் திருவாரூர்த்தியாகராஜஸ்வாமிமீது பலபாவினங்களாற்பாடிய 100-செய் யுளையுடையதொருபாமாலை. இதனை இலக்கண விளக்க பரம்பரையில் வந்த திருவாரூர் ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர் அவர்கள் அச்சிட்டு வெளி யிட்டிருக்கின்றனர். இதன் விலை அணு—2.

---

7. அமிருதசஞ்சீவினி :— இது ஆங்கிலத்தில் "ஸர் வால்டர் ஸ்காட்" என்ற பண்டிதராற் செய்யப்பட்ட டாலிஸ்மன் என்னும் கதையின் மொழிபெயர்ப்பாகத் தமிழ்நடையில், ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல் உதவியுபாத்தியாயர் ஸ்ரீமத்-ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்க ளாலெழுதப்பட்டது. புத்திசாதுர்யத்தையும், பொழுதுபோக்கை யும் விரும்பிக் கதைப்புத்தகம்படிப்பவர்களுக்கு இது மிகப்பயன் படத்தக்கது. இதன் விலை ரூபா 1—2—0.

---

8. குசாவதி என்னும் வஞ்சகவநிதை :— இது ஸ்ரீமத்-செ. இராஜுச்செட்டியார் எம். பி. பி. ஐ. அவர்களால் படித்தற்கினிமை யுடையதாய்ப் பெண்மக்கள்தீய சூழ்ச்சிக்கு உள்ளாகாதவாறு உலகிய லோடு பொருந்த வெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு—8.

---

9. குலசேகரன்; அல்லது பொற்கையான்மாறன் :— இது கும்ப கோணம் நேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-சு. ஸ்ரீநிவாஸையங்கார், "பாலபண்டித"ரால் தெளிவான தமிழ்நடையிலெழுதப் பட்டதொரு சிறு நாடகம். இதன் விலை அணா—3.

---

10. நம்மவர் நூற்றெட்டு:—இது திருவையாறு ஜ்யோதிஷ தந்திர சபையை ஸ்தாபித்தவரும், பிருஹத்ஸம்ஹிதை முதலிய அரிய சோதிட நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரு மாகிய ஸ்ரீமத், N. சிதம்பரம் ஐயர் (B. A. F. T. S.,) அவர்களாலியற்றப்பட்டது. இதில் இந்தியர்களின் பூர்விக ஒழுக்க வழக்கங்கள் இக்காலம் மாறுதலடைந்து வருவதைக்குறித்துப் பாடப்பட்ட 108 வெண்பாக்களடங்கியிருக்கின்றன. அவை யியற்கையணியிலெளிதிற் பொருள்விளங்கி யினிமைபயக்குமாறு பாடப்பட்டிருத்தலால் எல்லாஜனமகிழத்தகன. இப்புத்தகத்தின்விலை அணா 3, தபாற்கூலி வேறு.

---

11. ஆதங்கநிக்கிரகவைத்தியவர்த்தகசாலையின்சித்திரப்புத்தகம்:— இதிலுள்ள சித்திரப்படங்களைப் பார்த்ததில், ஜாம்நகரில் ஒரு பிரதானமான வைத்திய வர்த்தகசாலை இருப்பதாகவும், அதன் அங்கமாகிய பலபல பிரிவுகளும் வெவ்வெறு கட்டிடங்களிற் றனித்தனி வேலைசெய்து வருவதாகவும், இதற்கு பாம்பே, கல்கத்தா, சென்னை, புனா, கராச்சி, இரங்கூன், கொழும்பு இவ்விடங்களிலும் ஆபீசுகளும், பிராஞ்சாபீஸ்களும் இருப்பதாகவும் காட்டுகின்றன. இவ்வர்த்தக சாலைக்கு அத்தியக்ஷராகவிருந்து சொற்பகாலத்தில் இவ்வளவு அபிவிருத்தி செய்திருக்கிற மிஸ்டர் மணிசங்கர் கோவிந்தஜீயுடைய நன்முயற்சி மதிக்கத்தக்கதே.

---

12. "ஏழைப்பெண்களுக்குப் பண்டு"— என்னும் விளம்பரம் வந்தது. அதனால்,அநாதையான பெண்மக்களுக்கு கல்வியும், தொழிலும் கற்பித்து அவர்கள் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு, வேண்டும்

பொருள்சேர்த்து ஒரு நிர்வாகசபை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அதற்குத் தர்மசீலர்களான கனதனவான்களினுதவி யெதிர்பார்க்கப் படுகிறதென்றும் தெரியவருகிறது. இது, இக்காலத்துக்கேற்ற அநுகூலமான காரியமாயிருப்பதால் இந்தியர்களாயுள்ள எல்லோரும் இதற்கு வேண்டுமுதவிபுரிய முன்வருவார்களென்ற நம்பிக்கையுடன் இச்சங்கத்தை நடத்தும் காரியதரிசினியாகிய ஸ்ரீமத், ஆர். எஸ். சுப்பலக்ஷ்மியம்மாள் (பி. ஏ.,) அவர்கள் நன்முயற்சி பயன்பெறுமாறு எல்லாராலும் பாராட்டற்பாலதே.

☞ மேற்கண்டபுத்தகங்கள் முதலியன வழக்கப்படி பாண்டியன் புத்தகசாலையிற் சேர்க்கப்பெற்றன.

பத்திராதிபர்.

உ

பிழைதிருத்தம்

சென்ற ஆடிமாதத்துச் செந்தமிழ் (தொகுதி ௧௧-பகுதி ௯) இன் ௨௯௯ ஆவது பக்கத்தில், ௧௧-வது வரியில் "போருளில்" என்றிருப்பதைப் "பொருளில்" எனவும், ஷை பக்கம் ௧௫ ஆவது வரியில் "தொழி" யென்றிருப்பதைத் "தோழி" எனவும், ஷை பக்கம் ௨௮ ஆவது வரியில் "தொழிமாட்டு" என்றிருப்பதைத் "தோழிமாட்டு" எனவும் ஷை, ஷை, ௩00 ஆம்பக்கம் ௯ ஆவது வரியில் "குறையை" என்றிருப்பதை "கையுறையை" எனவும். ஷை பக்கம் ௧௬ ஆவது வரியில் "கண்ணெயே" என்றிருப்பதைக் "கண்ணேயே" எனவும், ஷை பக்கம் ௨௨ ஆவது வரியில் "பற்குறி" என்றிருப்பதைப் "பகற்குறி" எனவும் திருத்திப்படித்துக்கொள்க.